DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**SC.No.50/2025**

PROSECUTION WITNESS No. 8

| | |
|---|---|
| Name | : கண்ணதாசன் |
| Father’s Name | : செல்லபெருமாள் |
| Age | : |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 24th day of July, 2025.

எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது, பெரிய காட்டுப்பாளையம், பண்ருட்டி வட்டம், கடலூர் மாவட்டம் என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இதற்கு முன்பு நான் கோயம்போடு மார்க்கெட்டிற்கு முன்புறமுள்ள தெருவில் பிள்ளையார் கோவில் அருகேயுள்ள வீட்டில் வாடகைக்கு குடியிருந்தேன். அந்த வீட்டின் உரிமையாளர் பெயர் மைக்கேல் துரைப்பாண்டி. இந்த வழக்கில் இறந்து போன நபர்தான் அவர். நான் அந்த வீட்டின் 2ம் தளத்தில் குடியிருந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அவர் பெயர் வெங்கடேஷ். எனது அறைக்கு பக்கத்து அறையில் அவர் குடியிருந்தார். 28.04.2024

அன்று மதியம் 2, 2.30 மணியளவில் நான் தூங்கிகொண்டிருந்தேன், எனது அறைக்கு மேலே போடப்பட்டிருந்த தகர சீட்டில் நடந்து செல்லும் சத்தம் கேட்டது. நான் வெளியே வந்து பார்த்தேன். மேலே யார் இருந்தார்கள் என்று தெரியவில்லை. கீழே நிறைய ஜனம் நின்று கொண்டிருந்தது. ஒருவர் கீழே விழுந்து விட்டதாக சொன்னார்கள். நான் கீழே இறங்கி பார்த்தேன். அப்போது, பக்கத்து வீட்டிலிருந்து அடிபட்ட எனது வீட்டின் உரிமையாளர் மைக்கேல் துரைப்பாண்டியை இரண்டு பேர் தூக்கிவந்தார்கள். அவர் தலையில் அடிபட்டிருந்தது. ஆம்புலன்ஸிற்கு போன் செய்தார்கள், ஆம்புலன்ஸ் வந்து அவரை அழைத்து சென்றது. பின்னர், அவர் இறந்து விட்டதாக போலீசார்சொல்லி தெரிந்து கொண்டேன். நான் எதிரியை அங்கு பார்க்கவில்லை.

**சாட்சி தன் முந்தைய வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டு நீதிமன்றம் அனுமதித்ததன் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:-**

ஆய்வாளர் என்னை விசாரித்த போது, அறையில் நானும், அ.சா.4-ம் வீட்டில் இருந்த போது மதியம் சுமார் 2.30 மணியளவில் வீட்டு ஓனர் அம்மாவிடம் வீண் தகராறு செய்து கையால் அடித்து விட்டார் என்றும், இதைப்பார்த்த மைக்கேல் துரைப்பாண்டி சத்தம் போடவே எதிரி பயந்து

2வது மாடிக்கு மேலே உள்ள இரும்பு சீட்டில் ஏறி மறைந்து கொண்டார் என்றும், பின்னால் சென்ற மைக்கேல் துரைப்பாண்டியின் அலரல் சத்தம் கேட்டு பக்கத்து வீட்டி மாடியில் பார்த்த போது, அங்கு அவர் தலையில் அடிபட்டு ரத்த வெள்ளத்தில் கிடந்தார் என்றும் ஆஜர் எதிரி இரும்பு சீட்டிலிருந்து கீழே இறங்கி தப்பி ஓடிவிட்டார் என்றும் கூறிவிட்டு தற்போது எதிரி எனது பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் அவரிடமுள்ள நட்பின் காரணமாக வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>** இல்லை.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |